# ஜோன்லொக்கின் முதல்நிலைப்பண்புகள், வழிநிலைப்பண்புகள் பற்றிய வேறுபாட்டிற்கு எதிராக பார்க்ளியினால் முன்வைக்கப்பட்ட விமர்சனக் கருத்துக்கள்-மனித அறிவின் அடிப்படைகள் பற்றிய கட்டுரை எனும் நூலினை அடிப்படையாகக் கொண்டதோர் பகுப்பாய்வு.

# Berkeley’s Critique of Locke’s Distinction Between primary and secondary qualities – An analytical study based on A Treatise concerning the principles of Human knowledge.

**P.Poologanathan**
Department of Philosophy,
University of Peradeniya,
ponnuthurainathan1985@gmail.com

ஆய்வுச் சுருக்கம்.
இவ்வாய்வானது நவீனகால அறிவாராய்ச்சியலில் அறிவினைப் பெறுதல் தொடர்பில் ஜோன்லொக்கினால் முன்வைக்கப்பட்ட முதல்நிலைப் பண்புகள், வழிநிலைப் பண்புகள் எனும் வேறுபாட்டைப் பார்க்ளி எவ்வாறு தனது *A Treatise concerning the principle of human knowledge*எனும் நூலில் எடுத்துக் காட்டுக்களினூடாக நிராகரித்து லொக்கின் அறிவாராய்ச்சியியற் திட்டத்தில் ஏற்பட்ட பிரச்சினையினைத் தீர்க்க முற்படுகின்றார் என்பதனை ஆய்வு செய்வதாக அமைகின்றது. அனுபவவாதியான ஜோன்லொக் மனித அறிவானது புலனுணர்ச்சி,(sensation) ஆழ்ந்து எண்ணல்(reflection) எனும் இருவழிகளில் கிடைக்கப் பெறுகிறது எனவும் இவ்வாறு பெறப்படும் உட்பதிவுகளை உளம் தன்னிடத்தே உடனடியாகக் காண்கின்ற பொருள் “எண்ணம்”(idea) என்றழைத்தார். இவ் எண்ணங்களை தனிநிலை, கூட்டுநிலை எண்ணங்களாக பாகுபாடு செய்தார். புறப்பொருட்கள் நம்முள் இவ் எண்ணங்களை உண்டாக்கவல்ல திறமைகளைப் பெற்றுள்ளன. இத்திறமைகளையே லொக் பண்புகள் என அழைத்தார். இப்பண்புகளை முதல்நிலை, வழிநிலை பண்புகள் என வேறுபடுத்தினார். முதல்நிலை பண்புகள் பொருட்களைச் சார்ந்தது எனவும் வழிநிலை பண்புகள் பொருட்களில் இல்லாதிருப்பவை என்றும் இது மனிதர்களுக்கு மனிதர்கள் வேறுபடும் என்றும் லொக் தனது *Essay Concerning Human Understanding* எனும் நூலில் வெளிப்படுத்தினார். லொக் இவ்விரு பண்புகளையும் வேறுபடுத்திக் காட்டிய போதும் அவற்றிற்கிடையிலான உறவு முறையை அவரால் தெளிவுறுத்த முடியவில்லை. எனவே இக்குறைபாட்டை நீக்குவதற்கு பார்க்ளி தனது மேற்படி நூலில் லொக்கின் இப்பண்பு வேறுபாட்டினை நிராகரித்து முதல்நிலை, வழிநிலைப் பண்புகள் எனும் இரண்டும் பிரிக்க முடியாத வகையில் ஒன்று சேர்ந்துள்ளன எனவும் இவை யாவும் எமது உளத்தைச் சார்ந்தே காணப்படுகிறதே தவிர வேறில்லை என்பதனை தனது நூலில் எடுத்து விளக்கி தீர்வு காண முயன்றார். பார்க்ளியின் இவ் முயற்சியினை கண்டறிந்து விளக்குவதற்காக இவ்வாய்வானது பகுப்பாய்வு முறையியல், விமர்சன முறையியல், ஒப்பீட்டாய்வு முறையியல் என்பவற்றைப் பயன்படுத்துகின்றது. மற்றும் இவ்வாய்வுக்கு வேண்டிய தரவுகள் இலக்கியங்கள், சஞ்சிகைகள் இணையத்தள தரவுகள் என்பவற்றிலிருந்து பெறப்பட்டு சீராக வடிவமைக்கப்படுகின்றது.

பிரதான சொற்கள்: Primary Qualities, Secondary Qualities, Ideas, Simple Ideas, Complex Ideas, Sensations.

## 1.ஆய்வு அறிமுகம்

முதல்நிலைப் பண்புகள், வழிநிலைப் பண்புகள் எனும் வேறுபாடு மெய்யியலில் முதன்முதலில் கி.மு. 5ம் நூற்றாண்டு காலத்தில் வாழ்ந்த Democritus னால் முன்வைக்கப்பட்டது. பின்னர் 1623 காலப்பகுதியில் கலிலியோவினால் இது ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவர் முதல்நிலை பண்புகளை பொருட்களிலிருந்து பிரிக்க முடியாது எனவும், இது உடலை (சடம் சார்ந்தது எனவும்) வழிநிலை பண்புகள் உணர்ச்சி சார்ந்தது எனவும் குறிப்பிட்டார். பின்னர் Descartes,Boyle, Newton, Locke போன்றவர்கள் கலிலியோவின் மேற்படி கருத்தினை ஏற்று வளர்த்துச் சென்றனர். லொக் தனது அறிவாராய்ச்சியியலை இவ் முதல்நிலைப்பண்பு, வழிநிலைப் பண்புகள் எனும் பாகுபாட்டினை ஏற்று விருத்தி செய்தார். லொக் எமது முழு அறிவும் நுகர்ச்சியிலிருந்து பெறப்படுகின்றது எனக் கருதினார். உளம் உள்ளுறை எண்ணங்களுடன் பிறக்கவில்லை என்பது அவரது துணிவு. அவ்வாறெனில் உளம் எவ்வாறு எண்ணங்களை பெறுகிறது? எனும் கேள்வி எழுகின்றது. இதற்கு லொக் எண்ணங்கள் இருவழிகளில் கிடைக்கப் பெறுகிறது என்கிறார். அவையாவன,

1. புலனுணர்ச்சி. 2. ஆழ்ந்து எண்ணல்

எனும் இரண்டும் ஓர் இருண்ட அறையினுள் ஒளி ஊடுருவிச் செல்ல உதவும் இரு பலகனிகள் (windows) என்கிறார். மனித உளத்தின் முதலாவது திறமை புலனுணர்ச்சி, ஆழ்ந்து எண்ணல் என்பவற்றினூடான உட்பதிவுகளை பெறுவதாகும். இவ்வாறு உளம் தன்னிடத்தே காண்கின்ற எதனையும் உடனடியாகக்

காண்கின்ற பொருள் எண்ணம் (idea) என்கிறார். இவ்வாறு கிடைக்கும் எண்ணங்களை தனிநிலை(simple), கூட்டு நிலை எண்ணங்கள் (complex ideas) எனப் பாகுபாடு செய்தார். இவ் எண்ணங்கள் பொருட்களின் திறமையினால் உண்டாக்கப்படுகிறது எனவும், இத்திறமைகளையே லொக் பண்புகள்(qualities) எனக் குறிப்பிட்டார். இப்பண்புகளை லொக் இரு வகையாகப் பாகுபடுத்தினார்.

1. முதல்நிலைப் பண்புகள்(Primary qualities).
2. வழிநிலைப் பண்புகள்(Secondary qualities). என்பனவாகும்.

முதல்நிலைப் பண்புகள் என்பது ஒரு பொருளின் நீளம், அகலம், வடிவம், திண்மம், அசைவு, இயக்கம் என்பனவாகும். வழிநிலைப் பண்புகள் என்பது ஒரு பொருளின் நிறம், மணம், சுவை, ஒலி, உணர்வு என்பனவாகும். வழிநிலைப் பண்புகளை மனிதர்கள் தங்களது அனுபவத்திற்கமைய அறிந்து கொள்வார்கள். இவை மனிதர்களுக்கு மனிதர் மாறுபடும் தன்மை கொண்டது. ஆனால் முதல்நிலை பண்புகள் பொதுவானதும், மாறாததும் ஆகும். முதல்நிலை பண்புகள் புலன்களின் சார்பற்று இருப்பவை, பொருட்களில் உள்ளார்ந்திருப்பவை. லொக் பொருட்களின் பண்புகளை இவ்வாறு பிரித்தாலும் அவற்றிற்கிடையிலான உறவு முறையை (ஒரு முதல்நிலை பண்புக்கும் வழிநிலை பண்பிற்கும் அல்லது ஒருவழிநிலை பண்பிற்கும் வழிநிலை பண்பிற்கும்) நாம் அறிய முடியவில்லை எனவும் அறிவித்தார்.

பார்க்லி பண்புகளை லொக் இருவகையாகப் பிரித்து அவற்றின் உறவு முறையை அறிய முடியாது தவித்ததன் காரணம் அவர் செய்த பாகுபாடே எனக்கருதி இப்பாகுபாடு தேவையற்றது எனக் குறிப்பிட்டார். இம்முடிவை மெய்ப்பிக்கும் பொருட்டுப் பல காரணங்களை தனது *A Treatise Concerning the Principles of Human knowledge* எனும் நூலில் வெளிப்படுத்தினார்.

எனவே இவ்வாய்வானது லொக்கின் மனித அறிவு பற்றிய கட்டுரையில் (*Essay Concerning Human Understanding*) குறிப்பிடப்படும் இப்பண்புகள்

பற்றிய வேறுபாட்டை பார்க்லி எவ்வாறு தனது நூலில் எடுத்துக் காட்டுக்களினூடாக நிராகரித்து இப்பண்புகள் பற்றிய வேறுபாடு அறிவாராய்ச்சியலில் சடப்பொருட்கள் பற்றிய அறிவினைப் பெறுவதற்கு தேவையற்றது என்பதனை விளக்குகிறார் என்பதனை ஆய்வு செய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

2. ஆய்வுப் பிரச்சினை.

லொக்கின் முதல்நிலைப் பண்பு, வழிநிலைப் பண்புகள் எனும் பாகுபாட்டை பார்க்ளி எவ்வாறு தனது *A Treatise concerning the principles of human knowledge* எனும் தனது நூலில் எடுத்துக் காட்டுக்களினூடாகவும், விளக்கங்களினூடாகவும் நிராகரிக்கின்றார் என்பதனை கண்டறிவதே இவ்வாய்வின் பிரச்சினைக்குரிய விடயமாக அமைகின்றது.

3. ஆய்வின் நோக்கம்.

அறிவாராய்ச்சியலில் சடப் பொருள் பற்றிய அறிவினைப் பெறுதல் தொடர்பில் லொக்கினால் முன்வைக்கப்படும் முதல் நிலைப் பண்புகள், வழிநிலைப் பண்புகள் பற்றிய வேறுபாடு பார்க்லியினால் எவ்வாறு நிராகரிக்கப்படுகிறது என்பதனை அவரது *A Treatise Concerning the Principles of Human Knowledge*எனும் நூலினை பகுத்தாராய்ந்து கண்டறிவதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாக அமைகின்றது.

4. ஆய்வு முறையியல்.

இவ்வாய்வின் நோக்கத்தினை நேர்த்தியான முறையில் அடைந்து கொள்வதற்காக பல்வேறு ஆய்வு முறையியல்கள் பயன்படுத்தப்படுகின்றது. குறிப்பாக பகுப்பாய்வு முறையியல்,(Analytical method) விமர்சன முறையியல்,(Critical method) ஒப்பீட்டு முறையியல் என்பன பயன்படுத்தப்படுகிறது. அத்தோடு இவ்வாய்வுக்கு வேண்டிய தரவுகள் யாவும் முதல் நிலை, இரண்டாம் நிலைத் தரவுகள் மூலம் பெறப்படுகிறது. இங்கு முதல் நிலைத் தரவுகளாக லொக்கின் மனித அறிவு பற்றிய கட்டுரை (*An Essay Concerning Human Understanding),* மற்றும் பார்க்ளியின் *A Treatise Concerning Human Knowledge* போன்ற நூல்களும் இரண்டாம் நிலைத்தரவுகளாக இவ்வாய்வு சார்ந்த உரைநூல்கள்,இது தொடர்பில் சஞ்சிகைகள், இணையத்தளங்களில் வெளிவந்த சிறுசிறு கட்டுரைகள் என்பனவற்றிலிருந்து தரவுகள் பெறப்பட்டு இவ்வாய்வு தெளிவுறுத்தப்படுகிறது.

5. ஆய்வின் வரையறை.

இவ்வாய்வானது நவீன காலத்தில் குறிப்பாக (கி.பி. 1500 – 1800) காலப்பகுதியில் தோற்றம் பெற்ற அறிவாராய்ச்சியியல் நூல்களான லொக்கின் *An Essay concerning Human Understanding* மற்றும் பார்க்லின் *A Treatise Concerning The Principles of Human Knowledge*எனும் இரு நூல்களையும் அடிப்படையாகக் கொண்டு அதன் வரையறைக்குள் நின்று ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது.

6. இலக்கிய மீளாய்வு.

லொக்கினதும் பார்க்ளியினதும் அறிவாராய்ச்சியல் திட்டம் தொடர்பில் எழுத்து வடிவில் வெளிவந்த விடயங்களை என்று திரட்டி இலக்கிய மீளாய்வு இடம் பெறுகின்றது.

01. Schwegler,A.(1996).History of Philosophy எனும் நூலில் லொக் குறிப்பிடும் இருவகையான பண்புகள் தொடர்பில் ஆராய்கின்றார். மனித அறிவு எண்ணங்களினூடாக கிடைக்கப் பெறுகின்றது எனவும் பொருட்கள் எண்ணங்களை உள்ளடக்கவல்ல திறமையினை பெற்றுள்ளது என்றும் இத் திறமைகளே பண்புகள் எனவும் சில பண்புகள் பொருட்களை சார்ந்தவை என்றும் இதனை மூல அல்லது முதல் நிலை பண்பு எனவும் வழிநிலை பண்புகள் பொருட்களில் தாமாகவே இல்லாதிருப்பவை என்றும் இவை நிறம், சுவை, ஒலி போன்றவை எனவும் Schwegler லொக்கின் மனித அறிவு பற்றிய கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு தனது நூலில் குறிப்பிடுகின்றார்.

02. Eichhoefer, G.W. (1995).Enduing issues in philosophy எனும் நூலில் பொருட்களின் பண்புகளை இரண்டு பிரிவாகப் பிரித்து முதல்நிலைப் பண்புகளான பரப்புடைமை, உருவம், இயக்கம், ஓய்வு போன்றனவும் வழிநிலை பண்புகளான நிறம், ஒலி, சுவை போன்றவற்றையும் குறிப்பிடுகின்றார். இப்பண்புகளே எண்ணங்களுக்கு அடிப்படை எனவும் இவ் எண்ணங்கள் தனிநிலை எண்ணங்களாகவும், கூட்டுநிலை எண்ணங்களாகவும் விளங்குகிறது. தனிநிலை எண்ணங்களைப் பெறுதல், அவற்றுடன் ஏனைய தனிநிலை எண்ணங்களை இணைத்தல், உறவுபடுத்தல், பிரித்தல் போன்ற செயல்களால் கூட்டுநிலை எண்ணங்கள் உருவாகிறது. கூட்டுநிலை எண்ணங்கள் யாவும் தனிநிலை எண்ணங்களால் ஆக்கப்பட்டவை. ஒரு சுவரைக்கட்ட கற்கள் தேவைப்படுவது போல கூட்டுநிலை எண்ணங்களை பெற தனிநிலை எண்ணங்கள் தேவைப்படுகிறது என குறிப்பிடுகிறார்.

03. Brown,S.( 2000).British Philosophy and the age of enlightenment. எனும் நூலில் லொக்கின் அறிவாராய்ச்சியலின் மையப்பிரச்சினைகளை தெளிவாக்கும் வகையில் அறிவின் மூலம், அதன் இயல்பு, அதன் வலிதுடமை என்பவற்றை ஆராய்கின்றார். உண்மையான அறிவு அனுபவத்தினூடாக பெறப்படும் எனவும் இந்நிலையில் பெறப்படும் அறிவு இரு அம்சங்களில் தங்கியுள்ளது என லொக் தெளிவுறுத்துகிறார். இவை முதல்நிலை, வழிநிலை பண்புகள் எனும் இரண்டுமாம். முதல் நிலைப்பண்புகள் பொதுவானதும் மாறாததுமாகும். வழி நிலைப் பண்புகள் மனிதர்களுக்கு மனிதர் வேறுபட்டடைய வல்லதாகும். இதனை அனுபவத்தினூடாகவே அறிந்து கொள்பவர்களாக காணப்படுகின்றனர்.இவ்வாறு வழிநிலைப் பண்புகளை கொண்டமைகின்ற அறிவானது எந்தளவிற்கு நிச்சயத்தன்மையும், ஐயத்திற்கிடமில்லாததாகவும், தெளிவானதாகவும் இருக்க வேண்டும் எனும் போது வழிநிலைப் பண்புகளின் தாக்கத்தால் சில ஐயத்திற்கு இடமான விடயங்களையும் அறிவில் ஏற்க வேண்டிய நிலை லொக்கின் விளக்கத்திலிருந்து தெளிவாகிறது. அனுபவ அறிவில் முதல்நிலைப் பண்புகள் வழி அறிவு திடத்தன்மை கொண்டதாய் அமைகின்ற போதிலும் வழிநிலைப் பண்புகள் அகனிலை சார்ந்தாக அமைவதனால் ஐயத்திற்கு இடமளிப்பதாய் அமைந்து விடுகிறது எனவும் கூறுவார்.

04. ஞானகுமாரன்(2003)மெய்யியல் எனும் நூலில் பார்க்லி லொக்கிலும் பார்க்க ஒரு படி மேலே சென்று முதல்நிலை பண்புகளும் அகனிலை தன்மையானதே என விளக்கினார். உதாரணமாக ஒரு மேசையின் வழிநிலை பண்புகளை மணம், சுவை போன்றவை மட்டும் அகனிலை சார்ந்ததல்ல எனவும் முதல்நிலை பண்பினை குறிக்கும் நீளம், அகலம் போன்றனவும் அகனிலைக்குரியதே என்றார். இவரது கருத்துப்படி முதல்நிலை பண்புகள், வழிநிலை பண்புகள் யாவும் மனக்கருத்துக்களே அறியக் கூடியனயாவும் மனக்கருத்துக்களே தவிர வேறில்லை என்றார்.

05. Georges Dicker(2011) Berkeley's idealism எனும் நூலானது லொக்கின் முதல் நிலைப்பண்புகள் வழிநிலைப்பண்புகள் பற்றிய பாகுபாட்டிற்கு எதிராக பார்க்ளியினால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை விளக்குவதாக அமைகின்றது. இவ் நூலானதும் எனது இவ்வாய்வுக்கு தூண்டுதலாக அமைந்தது.

7.ஆய்வு தொடர்பான விவாதங்கள்

பார்க்ளி, பண்புகளை லொக் இரு பிரிவுகளாகப் பிரித்து அவற்றின் உறவு முறையை அறிய முடியாது தவித்ததன் காரணம் அவர் செய்த பாகுபாடே எனக்கருதி இப்பண்புகள் பற்றிய பாகுபாடு தேவையற்றது என குறிப்பட்டு இம்முடிவை மெய்பிக்கும் பொருட்டு பல காரணங்களை கூறினார்.

முதல்நிலைப் பண்புகளும் வழிநிலைப் பண்புகளைப் போலவே எமது புலன்களை சார்ந்தே இருக்கின்றன. ஒரு பொருளின்

முதல்நிலைப் பண்புகளான பரப்புடமை, அதனுடைய நிறத்தை (வழிநிலைப் பண்பினை) அறிவதைப் போலவே அறியப்படுகிறது. முதல்நிலை, வழிநிலையாகிய இருவகைப் பண்புகளும் நம் புலன்களை சார்ந்தும் நம் உளத்தின் புலனுணர்ச்சிகளாகவும் உள்ளன. எனவே எல்லாப் பண்புகளும் ஒரே அளவில் உண்மையானவை அல்லது எண்ணங்களால் ஆனவை என்றே கருத வேண்டியிருக்கிறது.

முதல்நிலைப் பண்புகளும் வழிநிலைப்பண்புகளும் பிரிக்க முடியாத வகையில் ஒன்று சேர்ந்தே உள்ளன. நாம் ஒரு பொருளின் வழிநிலை பண்புகளை நீக்கி முதல்நிலை பண்புகளை மட்டும் காணமுடியாது. நிறம், சுவை போன்ற வழிநிலை பண்புகளை நீக்கி வெறும் பரப்புடைமையை மட்டும் காணவியலாது. அவ்வாறே உருவம் என்பதனை தனியாகக் காண முடியாது. அதனை எப்பொழுதும் ஒரு பொருளின் உருவமாகவே உணரமுடியும். உருவம் பெற்றுள்ள பொருளை நிறத்தோடன்றி உணரமுடியாது. உருவமுள்ள இடமெல்லாம் நிறமும் சேர்ந்தே இருக்கிறது. மேலும் வழிநிலைப் பண்புகள் மூலமாகவே நாம் முதல்நிலைப் பண்புகளை அறிகின்றோம். வழிநிலைப் பண்புகள் அகனிலையானவை (Subjective) என்றுமெய்ப்பிக்க கூறும் காரணங்களே முதல் நிலை பண்புகளும் அத்தன்மையை பெற்றுள்ளன என்று மெய்ப்பிக்கவும் பொருந்துகின்றன என பாாக்ளி தனது கருத்தினை வெளிப்படுத்துகின்றாா்.

எடுத்துக்காட்டாக வெப்பமும் தட்பமும் (Heat And Cold) உளத்தின் நிலைகளேயன்றி பொருட்களின் தன்மைகள் அல்ல. மேலும் அவை உடல் சார்ந்த பொருட்களில் இருந்து கொண்டு அவற்றை செயற்படுத்துவதாகவும் கருதமுடியாது. ஏனெனில் ஒரு பொருள் ஒருவா் கைக்கு வெப்பமாகவும் மற்றொருவருக்கு வெதுவெப்பமாகவும் தோன்றலாம். இவ்வாறு பாா்த்தால் இம்முறையைக் கொண்டே பரப்புடமை, உருவம் போன்ற பண்புகளும் பொருட்களில் உள்ள பண்புகள் அல்ல அவைகளும் உளத்தை சாா்ந்தவையே என்று கூற முடியும்.

மேலும் ஒருவா் பல கோணங்களிலிருந்து ஒரு பொருளை பாா்க்கும் போது அப்பொருள் பாா்வைக்கேற்ப வேறுபடுவதும், பாா்வைக்குறைபாடு உள்ளவா்களுக்கு ஒரே இடத்திலும் காலத்திலும் உள்ள ஒரே பொருள் வெவ்வேறாகத் தோன்றுவதும் முதல்நிலை பண்புகளும் உருவத்தைச் சோ்ந்த நிலையான பண்புகளின் பிரதிகளாயிருக்க முடியாதென்பது பெறப்படும். எனவே பரப்புடமை, உருவம் போன்ற பண்புகளும் அகனிலையானவை உளத்தை சாா்ந்தவை என பாா்க்ளி வாதிடுகிறாா்.

இவ்வாறு பாா்க்ளி பண்புகளை முதல்நிலை வழிநிலை பண்புகள் என பிரிப்பது தவறானது என்றும் அவற்றில் ஒன்றைக் காட்டிலும் மற்றொன்றிற்கு மிகுதியான அளவில் ஏற்புடமை உள்ளதாக கருதுவது பொருத்தமற்றது எனவும் எடுத்துக் காட்டினாா். முதல்நிலைப் பண்புகள் வழிநிலை பண்புகளைக் காட்டிலும் அதிக ஏற்புடமை தன்மை கொண்டவை என கூற முடியாது. ஏனெனில் இருவகைப் பண்புகளும் எப்போதும் உளத்தைச் சாா்ந்தே உள்ளன என்று கருதி லொக்கின் முதல்நிலைப் பண்புகள், வழிநிலை பண்புகள் எனும் பாகுபாட்டை பாா்க்ளி தனது *A Treatise Concerning The Principle of Human Knowledge*நூலில் நிராகரிக்கிறாா்.

8. முடிவுரை.

லொக் தனது மனித அறிவு பற்றிய கட்டுரை எனும் நூலில் பொருட்களின் முதல்நிலைப் பண்புகள், வழிநிலைபண்புகள் எனும் இருவகையான பண்புகளை குறிப்பிடுகிறாா். இவற்றில் முதல்நிலை பண்புகள் பொருட்களை சாா்ந்தவை என்றும் வழிநிலைப் பண்புகள் எமது உளத்தை சாா்ந்தவை என்றும் குறிப்பிட்டாா். இதனை ஏற்காத பாா்க்ளி பொருட்களின் முதல்நிலைப் பண்புகளும் எமது உளத்தைச் சாா்ந்தவையே எனக்குறிப்பிட்டு அனைத்தும் உளக்கருத்துக்களே என்று முடிவு கட்டினாா். இவ்வாறிருக்கையில் பரப்புடைமையும், உருவமும் உளத்தில் மட்டும் இருப்பதாக கருதினால் உளமே பரப்புடைமையும் உருவமும் பெற்றதாகி விடுமோ? எனும் தடை பாா்க்லியின் இக்கருத்திற்கு எதிராக முன் வைக்கப்படுகிறது. அதுமட்டுமன்றி தீ வெப்பத்தை உண்டாக்குகிறது என்பதற்குப் பதிலாக ஓா் ஆன்மா எவ்வாறு செய்கின்றது என கூறுவது முட்டாள்த் தனம் இல்லையா? என்பது போன்ற தடைகள் பாா்க்லியின் கருத்திற்கு எதிராக முன்வைக்கப்படுகிறது. பொருட்களின் பண்புகள் பற்றிய இக்கொள்கை பிற்காலத்தில் கியூமினால் அறியொணாக் கொள்கையாக முன்வைக்கப்பட்டு அறிவாராய்ச்சியியலில் தீா்க்கப்பட முடியாத பிரச்சினைகளில் ஒன்றாக செல்கின்றது.

## REFERENCE

01. Brown,S. (2000).*British Philosophy and the age of enlightenment*. London & New York: Rutledge.

02. Cahn,S.M.(1985).*Classics of western philosophy.*Hackett publishing company, Indianapolis.

03. Schwegler,A.(1996). *History of Philosophy.* New Delhi: Amole publication pvt ltd.

04. Eichhoefer, G.W. (1995).*Enduing issues in philosophy.* U.S.A.: Green haven press.
05. Popkin,R.H. (1997). *Philosophy- Made simple.* England.: Aurum stroll, oxford

06. Thomas J.Mccomack. (2003). *A Treatise concerning the principle of human knowledge.*New York: Dover publication

07. Lowe,E.J. (1995). *Locke: on human understanding.* London & New York: Rutledge,

08. Locke, J. (1995). *An Essay concerning human understand*ing. New York.: George Routledge and sons Ltd.

09. Christention, R. (1999). *Philosophy and choice.* California: May field Publishing Company

10. .www.academia.edu/.../On_Berkeley_s_Critique_of_Locke_s_Distinction

11. https://en.wikipedia.org/wiki/A_Treatise_Concerning_the_Principles_of_Human_Knowledge.

12. www.isu.edu/~baerralp/BerkeleyCriticisms.rtf.

13. digitalcommons.iwu.edu/cgi/viewcontent.cgi?article=1040&context....